
Registered as a Newspaper
பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 62
சனிக்கிழமை
27 ஜனவரி 2024
தை 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"அப்ப திரும்பவும் இண்டைக்கும் தேரை இழுத்து தெருவில விடப்போயினம் பாருங்கோ"

# ஐ.எம்.எப். நிபந்தனைகளை நடைமுறைப்படுத்த உதவுக

## அனைத்துக் கட்சிகளையும் கோருகின்றார் ஜனாதிபதி!



கொழும்பு, ஜனவரி 27

சர்வதேச நாணயநிதியத்துடனான ஒப்பந்தத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் அதன் முகாமைத்துவப் பணிப்பாளருடன் கலந்துரையாடலில் பங்கேற்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல்கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

11

## நவீன யுகத்துக்கேற்ற புதிய சட்டமே தேவை

### சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 27

நாட்டில் அமுலில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் தவறான வழியில் மிகவும் கொடூரமாகப் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன. எனவே, நவீன யுகத்துக்கேற்ற வகையிலான புதிய சட்டமொன்றே அவசியம்.

11

### குறுகியகால அவகாசத்தில்

## தமிழரசின் மத்திய குழு கூடுகின்றது இன்று!

### இரவிரவாக அழைப்பு!

யாழ்ப்பாணம், ஜனவரி 27

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம், மிகக்குறுகிய கால அவகாசத்தில் இன்று கூடவுள்ளது. மத்திய குழுக்கூட்டத்தைக் கூட்டுவதாக முடிவெடுக்கப்பட்டு, நேற்று இரவிரவாக மத்திய குழுவில் அங்கம் வகிப்போருக்கு

11

## அரசை வீட்டுக்கனுப்ப பெரும் போராட்டம்

### கொழும்பில் 30 ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு, ஜன. 27

புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் உட்பட அடக்குமுறைச் சட்டங்களைக் கொண்டுவந்து மக்களை அடக்கியாளும் இந்த ரணில் - ராஜபக்ச அரசை வீட்டுக்கு அனுப்ப மக்கள் அணிதிரள வேண்டும். இதற்கான அரசியல் சமர் எதிர்வரும் 30ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகும் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'ரணில் - ராஜபக்ச ஆட்சியை மக்கள் நிராகரித்துள்ளனர். அரசுக்கு எதிராக மக்கள் மத்தியில் கடும்

11

### தமிழரசுக்கட்சியின்

## பொதுச்செயலாளர் உள்ளிட்ட பதவிகளுக்காக இன்று இழுபறி

யாழ்ப்பாணம், ஜன. 27

தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் உள்ளிட்ட பதவிகளுக்கு இன்று இடம்பெறும் பொதுக்கூட்டத்தில் கடும் போட்டி நிலவும் என்று கருதப்படுகின்றது.

தமிழரசுக் கட்சியின் பொதுக்குழுக்கூட்டம் திருகோணமலையில் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது. தமிழரசின் தலை

11

## எதிர்க்கட்சிகளின் அப்பள அரசியல்!

### ரணில் நையாண்டி

கொழும்பு, ஜன. 27

அப்பள அரசியலைத்தான் எதிர்க்கட்சிகள் செய்துகொண்டிருக்கின்றன. இதற்கு என்னால் முடிவுகட்ட முடியாது. நாம் நேர்கோட்டில் தொடர்ந்து பயணிக்கவேண்டும்

11

## நாடாளுமன்றம் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜன. 27

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாடாளுமன்றக் கூட்டத்தொடர் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பும் வெளியாகியுள்ளது.

12

## மரணத்தைக் கொண்டாடாதீர்



### நீதிஅமைச்சர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 27

பிரபாகரன் உயிரிழந்தபோதும்கூட பட்டாசு கொளுத்துவது, பாற்சோறு சமைப்பது மனித பண்புகளுக்கு எதிரான செயல் என நாம் சுட்டிக்காட்டினோம். இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மரணம் தொடர்பிலும் சமூகவலைத்தளங்களில் கொண்டாட்டகரமான பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. சமூகத்

11




## ஊடக அடக்குமுறை: எதிராக நேற்றுப் போர்!

யாழ்ப்பாணம், ஜன. 27

அரசின் திட்டமிட்ட ஊடக அடக்குமுறைகள் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் நசுக்கப்படுகின்றமைக்கு எதிராக யாழ்.நகரில் நேற்றுப் போராட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

10

## ஜனாதிபதித் தேர்தலை நாமே தீர்மானிப்போம்!

### தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 27

ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்தினாலும், ஜனாதிபதித் தேர்தலில் மாற்றம் வரப்போவதில்லை என்று தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர் சமன் ரத்னாயக்க தெரிவித்தார்.

09

## வர்த்தக நிலையங்களில் இன்று டெங்கு ஒழிப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணம் நகரப்பகுதி மற்றும் திருநெல்வேலி பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் இன்று டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகரித்துவரும் டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பில், யாழ்.

09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கான பாதை விரைவில் திறக்கும் சாத்தியம்

## சிறீதரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 27

தமிழ் மக்கள் பெற்ற துன்பங்களை சிங்கள மக்கள் அனுபவிக்கத் தொடங்கி விட்டனர். இதனால் அரசு அச்சத்தில் மூழ்கியுள்ளது. இதுவும் தமிழர்களுக்கான பாதை திறக்க வழியாகும். நாம் எல்லோரும் இணைந்து ஒருமிக்க வேண்டிய காலகட்டம் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட தமிழரசுக்கட்சி உறுப்பினர்களால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது. மன்னார் அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வரலாறு இப்பொழுதும் எமக்கு புதிய பணியைத் தந்துள்ளது. இது ஒரு தனி மனிதன் ஆற்றும் பணியல்ல. மாறாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு சக்தியாக தமிழர் என்று திரள்கின்ற பொழுது இந்த சமூகம் - உலகம் - எம்மை அங்கீகரிக்கின்ற நாள் நெருங்கிக் கொண்டிருக்கின்றது என்ற நம்பிக்கை எம்மிடம் இருக்கவேண்டும்.

தமிழர்களின் தேசிய அபிலாஷைகளை உலகம் புதிய பரிமாணத்துடன் சிந்திக்க முற்பட்டுள்ளது. நாம் இழந்த ஆத்மாக்கள் இப்பொழுது எமக்கு உத்வேகத்தைத் தருகின்றன.

நாம் எந்த நோக்கத்துக்காக எமது உறவுகளின் உயிர்களை இழந்தோமோ அந்த நோக்கங்கள் இன்னும் அழிந்து போகவில்லை. சிங்கள மக்களுக்கு முன்பே நமது தமிழினம் இங்கு வாழ்ந்துள்ளது. நாம் இங்கு பல அடையாளங்களுடன் வாழ்ந்திருக்கிறோம்.

இழந்த இறைமையை நாம் மீண்டும் பெறவே போராடுகின்றோம். இலங்கை அரசுக்கு ஒரு செய்தியை கூறுகின்றோம். தமிழர்களுக்கு வெளிச்சமான பாதை திறந்துள்ளது. நாம் ஒருமித்த கரங்களாக இணைந்து கொள்வோம்-என்றார். (ஓ-56-60)

நிகழ்நிலைக் காப்புச் சட்டவரைவு

# சபாநாயகரின் ஒப்புதலை நிறுத்த எதிரணி முயற்சி!

கொழும்பு, ஜன. 27

நிகழ்நிலைக் காப்புச் சட்டவரைவில், சபாநாயகர் கையொப்பமிடுவதைத் தடுக்கும் வகையில் எதிர்க்கட்சிகள் இணைந்து சபாநாயகரைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:-

இந்தச் சட்டவரைவு அரசமைப்புக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட பெரும் தாக்குதலாகும். அரசமைப்புக்கு முரணான சரத்துகளைக் கொண்டதாக இந்தச் சட்டவரைவு காணப்படுகின்றது. உயர்நீதிமன்ற பரிந்துரைகள் அல்லாத பல திருத்தங்களை அரசாங்கம் குழுநிலையின்போது செய்தது. உயர்நீதிமன்றம் செய்யவேண்டும் என்று கூறியவைகளை செய்யாமல் உயர்நீதிமன்றம் நிராகரித்தவைகளையும் பரிந்துரைக்காத பல பாரதூரமான திருத்தங்களையும் செய்திருக்கிறது. இத்தகைய நடவடிக்கை உயர்நீதிமன்றத்தை அவமதிப்பதாகும்.

சபாநாயகர் கையொப்பமிட்டாலேயே இந்தச் சட்டவரைவு சட்டமாக நடைமுறையாகும். சட்டவரைவுக்கு அங்கீகாரத்தைக் கொடுக்கவேண்டாம் என்று எதிர்க்கட்சிகள் ஓரணியில் நின்று வலியுறுத்தவுள்ளோம்- என்றார். (அ-ம)

# இனிப்புப்பண்ட ஏற்றுமதி வளர்ச்சிக்குப் பங்களிப்பு

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 27

இனிப்புப் பண்டத் தொழில்துறையை முன்னணி ஏற்றுமதித் துறையாக மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இலங்கை இனிப்புப் பண்ட உற்பத்தியாளர் சங்கத்தின் 30 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்றபோது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.



கொக்கோ உள்ளிட்ட இனிப்புப் பண்டப் பயிர்களைப் பயிரிடுவதற்கு அரசாங்கத்துக்குச் சொந்தமான தோட்டங்களை குத்தகை அடிப்படையில் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ச-இ)

# கறுவாத் திணைக்களம் நிறுவுவதற்கு அனுமதி

கறுவா அபிவிருத்தித் திணைக்களம் எனும் பெயரில் புதிய திணைக்களமொன்றை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் கீழ் இயங்கி வருகின்ற தேசிய கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தை, இந்தக் கறுவாத் திணைக்களத்திடம் ஒப்படைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விவசாய மற்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சர் சமர்ப்பித்த இந்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)

# பெண்கள் - சிறுவர்களை பாதுகாக்க சட்டத்திருத்தம்

கொழும்பு, ஜன. 27

பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகம் தொடர்பான சட்டங்களைக் கடுமையாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய, தற்போதைய சட்டத்திலுள்ள குறைபாடுகளை நிவர்த்திசெய்து தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவை நாடாளுமன்றில் முன்வைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்தச் சட்டவரைவை வர்த்தமானியில் பிரசுரித்து நாடாளுமன்றில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# மின்சாரசபை ஓய்வூதியர் நலன்புரிச்சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 27

இலங்கை மின்சாரசபை ஓய்வூதியர் நலன்புரிச்சங்க வடக்கு மாகாண வருடாந்தப் பொதுக் கூட்டம் இலங்கை மின்சாரசபை பிரதிப் பொது முகாமையாளர் அலுவலக மேல் மாடி குணதிலக்க அரங்கில் இன்று மு.ப 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஓய்வுநிலை மின்பொறியியலாளர் தலைவர் க.ஞானகணேசன் தலைமையில் இடம்பெறும் இந்தக் கூட்டத்துக்குப் பிரதம விருந்தினராக பிரதிப் பொது முகாமையாளர் எஸ்.பிரபாகரன் கலந்துகொள்ளவுள்ளார். இதன்போது நிர்வாகத்தெரிவும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய தைப்பூச திருமஞ்ச உற்சவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. (ப-27)

# பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம், ஜன. 27

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் 13 ஆவது பரிசளிப்புவிழா நாளை 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரியின் அதிபர் திருமதி மேரி அஞ்செலா அல்போன்சஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.யோண் குயின்ரஸ் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-இ)

# தாய் கொலை மகன் கைது!

கொழும்பு. ஜன. 27

தனது தாயைக் கொடூரமாகத் தாக்கி கொலை செய்த மகன் நாவலப்பிட்டி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கொழும்பு நாவலப்பிட்டியில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. சந்தேகநபர் தனது தாயை பலமாகத் தாக்கியதில் அவரது தலைப்பகுதியில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவரது எலும்புகள் 22 துண்டுகளாக உடைக்கப்பட்டுள்ளன என்றும் மரண விசாரணையில் தெரியவந்துள்ளது.

67 வயதுடைய இருபிள்ளைகளின் தாயே உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் நாவலப்பிட்டிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை விபத்தில் இளைஞர் உயிரிழப்பு



முல்லைத்தீவு, ஜன. 27

புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் வாகிசன் வீதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் சுதந்திரபுரத்தைச் சேர்ந்த நவீன். (வயது-28) என்ற இளைஞர் உயிரிழந்துள்ளார்.

நெல்லு வெட்டும் இயந்திரத்தை ஏற்றி வந்த உழவு இயந்திரமும் சிறிய ரக பட்டா வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகின.

பட்டா வாகனத்தில் பயணித்த இளைஞர் படுகாயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஒ-19)

# இலங்கையின் சுதந்திரநாள் கரிநாளாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 27

**இலங்கையின் சுதந்திர நாளை கரிநாளாக அறிவிக்கவேண்டும் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.**

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலர் சோதிராசா சிந்துஜன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

எதிர்வரும் 4ஆம் திகதி இலங்கையின் சுதந்திர நாளை கரிநாளாக அறிவிக்கின்றோம். வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் சமூகங்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், மதத்தலைவர்கள், அனைத்துத் தொழிற்சங்கங்களும் சுதந்திர நாளை கரிநாளாக நடைமுறைப்படுத்த ஆதரவளிக்கவேண்டும்.

எமக்கான தீர்வு கிடைக்கும்வரை நாம் தொடர் போராட்டத்தில் ஈடுபடவேண்டும்.

கரிநாள் என்பது சிங்கள மக்களுக்கும் பொருத்தமானதே. இப்போதுள்ள ஆட்சியாளர்கள் சிங்கள மக்களுக்கும் எதிராகவே சட்டங்களை உருவாக்குகின்றார்கள்.

மேலும், 13ஆவது திருத்தத்தை நாம் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமுடியாது. தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காணாது நாங்கள் எங்களுடைய போராட்டங்களையோ போராட்ட வடிவங்களையோ கைவிட்டுப்போவதில்லை-என்றார். (ஒ-125)

## யாழ். கலாசார நிலையத்தில் இந்திய பாரம்பரிய நடனங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்தியாவின் 75 ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு இந்தியக் கலைஞர்கள் வழங்கும் இந்தியாவின் பாரம்பரிய நடனநிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பங்கேற்க அனுமதி இலவசம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## உழவியந்திரத்தால் மோதி பசுமாடொன்று படுகொலை

*மயிலத்தமடுவில் பாதகச்செயல்*

யாழ்ப்பாணம், ஜன. 27

மட்டக்களப்பு, மயிலத்தமடுப் பிள்ளையாரடி மேய்ச்சல் தரவையில், உழவியந்திரத்தால் மோதி பசுமாடொன்று கொல்லப்பட்டுள்ளது.

மயிலத்தமடுவில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவையில் அத்துமீறி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவோராலேயே இந்தப் பாதகச்செயல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பண்ணையாளர்களும் விவசாயிகளும் குற்றஞ்சாட்டுகின்றனர். இது தொடர்பில் ஏறாவூர்ப் பொலிஸாரிடமும் முறையிடப்பட்டுள்ளது. (ம-125)

## உரக்கொடுப்பனவு கிடைக்கவில்லை!

*முல்லை விவசாயிகள் கவலை*

முல்லைத்தீவு, ஜன. 27

முல்லைத்தீவில் காலபோகத்துக்கான உரக் கொடுப்பனவு பலருக்குக் கிடைக்கப்பெறவில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் கமநலசேவை நிலையங்களினூடாக மானிய உரங்கள் வழங்கப்பட்ட நிலையில் கடந்த ஆண்டு தொடக்கம் காலபோக நெற்செய்கைக்கு உரத்துக்குப் பதிலாகக் கொடுப்பனவே வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் முல்லைத்தீவில் பல விவசாயிகளுக்கு இந்தக் கொடுப்பனவு கிடைக்காமையால் பயிர்ச்செய்கை பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இந்தப் பணத்தைப் பெற்றுத் தருவதில் அசமந்தப்போக்கை அதிகாரிகள் கடைப்பிடிக்கின்றனர் என்றும் விவசாயிகள் குற்றஞ்சுமத்தியுள்ளனர். (ச-13)

# நீர் தேங்குவதால் நுளம்புப் பெருக்கம்



*சீர்செய்யுமாறு மக்கள் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை பிரப்பங்குளம் வீதியிலுள்ள கால்வாயில் தண்ணீர் ஓடாது தேங்கிக் காணப்படுவதால் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே இந்தக் கால்வாய் தண்ணீர் சீராக ஓடுவதற்குரிய நடவடிக்கைகளை யாழ்.மாநகரசபை முன்வரவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ஏ)

# தினம் தெரியுமோ?

**த**மிழரசுக் கட்சிக்கு இண்டைக்கு ரண்டாவது சோதினை. அண்டைக்கு ஒரு பதவிக்கு போட்டி வைச்சதாலையே ரண்டாப் போன கட்சிக்கு, இண்டைக்கு மிச்சம் இருக்கிற பதவியளை ஆருக்குப் பங்கிடுறது எண்ட சோதினை நடக்கப்போகுது. போனமுறை ஒண்டா நிண்டவை கூட இந்தமுறை, குரங்கு அப்பத்தைப் பிரிச்ச மாதிரி தங்களுக்க குத்துப்பட்டு பிரிஞ்சு நிக்கவும் நிறையச் சான்ஸ் இருக்காம்.

தலைவரைத் தெரிவு செய்யிற தேர்தல் நடக்கேக்க சுமந்திரனும், சிறீதரனும் எல்லாக் கிளைக்காரருக்கும் போன் பண்ணி, போக்குவரத்து ஏற்பாடு, சாப்பாடு, தங்குமிடம் பற்றிக் கேட்டு, அதுகள் இல்லாதவையளுக்கு தாங்களே அதுக்கான ஒழுங்குகளைச் செய்தவை. அதாலதான் பொதுச்சபைக்காரரில கனபேர் திருகோணமலைக்கு போகக்கூடியதா இருந்தது. ஆனால் இண்டைக்கு நடக்கிற தேர்தலுக்கு அவை ரண்டு பேரும் கிளையளோட கதைக்கவும் இல்லை, ஏற்பாடுகள் செய்யவுமில்லையாம். அதால இந்தமுறை வரவுவீதம் குறைவாத்தான் இருக்குமெண்டு சொல்லுகினம். சரி போக்குவரத்து ஏற்பாடுதான் இப்பிடியெண்டால், திருகோணமலைக்கு போறவைக்கும் சரியான ஏற்பாடு நேற்றிரவு வரை செய்யேலை.

இந்த மாநாட்டை நடத்திற பொறுப்பு திருகோணமலைக்கிளையிட்டத்தான் குடுபட்டிருக்கு. அப்ப அவைதான் மாநாட்டுக்கு வாறவைக்கு சாப்பாடு, தண்ணி, தங்குமிடம் எல்லாம் ஏற்பாடு செய்யோனும். முதல்நாள் பொதுக்குழுக்கூட்டம், அடுத்தநாள் மாநாடு எண்டு ரண்டு நாளைக்கு நிகழ்வு நடக்கிறதால, வெளிமாவட்டங்களில இருந்து போறவை அங்க ஒருநாள் கட்டாயம் நிண்டுதான் வரோனும். ஆனால் போறவை தங்கி நிக்க எந்தவொரு ஏற்பாடும் நேற்றிரவு வரை செய்யவேயில்லை. வெளிமாவட்டங்களில இருந்து கனபேர் போன் அடிச்சுக் கேக்க 'நீங்கள் தான் உங்கட தங்குமிட அலுவல்களைப் பாக்கோனும்' எண்டு கைவிரிச்சிட்டினமாம்.

ஒரு பெரிய கட்சியின்ர மாநாட்டு ஒழுங்குகளைச் செய்யிறவை, வாறவை தங்கிறதுக்கு ஒரு கலியாண மண்டபமோ இல்லாட்டி பொதுவான இடங்களையோ அதுவுமில்லாட்டி ஏதும் பள்ளிக்கூடங்களையோ ஒழுங்குபடுத்திற தொண்டும் பெரியவேலையில்லை. வெளிமாவட்டங்களில இருந்து கட்சி மாநாட்டுக்கு போறவைக்கு திருகோணமலை பற்றி பெரிசாத் தெரிஞ்சிருக்காது. முதல்நாள் நிகழ்வு முடியவே பொழுதுபட்டிடும். அதுக்குப் பிறகு அவை எங்க போய் தங்குமிடம் தேடுவினம்? கட்சியின்ர சின்னமா வீட்டை வைச்சிருந்தா மட்டும் பத்தாது. வாறவைக்கு தங்கிறதுக்கும் வீடுவாசல் ஒழுங்கு பண்ணிக் குடுக்கத் தெரிஞ்சிருக்கோனும் கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் ஊடாக நடத்தும் தமிழ்ப் பாலபண்டிதர் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி

கட்டுரையாளர் : கலாநிதி மைதிலி விசாகரூபன்
பிரதி நூலகர் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

### தோற்றுவாய்

யாழ்ப்பாணத்திலே காலங்காலமாக தமிழ் வளர்ப்பதற்கெனத் தமிழ்ச்சங்கங்கள் பல தோன்றி மறைந்தன. இந்நிலையில் நிலைபேறான சங்கம் ஒன்றை நிறுவுவதற்கு பிரம்மஸ்ரீ தி. சதாசிவஐயர் உள்ளிட்ட பலரால் பெருமுயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதன் பயனாக யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் 1921ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் பதினேழாம் திகதி நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்திலே ஆரம்பிக்கப்பட்டது. அப்போது இலங்கை முழுவதற்கும் கல்விப் பணிப்பாளராயிருந்த இவான்ஸ் என்பவர் அதன் தலைவரானார்.

### இலச்சினை

இச்சங்கத்தின் இலச்சினையாக ஆரம்பத்தில் ஏரி பெருத்த எருது மாட்டின் படமே காணப்பட்டது. இவ் எருது, சிந்துவெளி நாகரிகத்தின் எஞ்சியுள்ள சின்னங்களிலொன்றாகக் காணப்படுகின்றது.

### நிர்வாகம்

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நிலைபெறுவதற்கு நாட்டின் அப்போதைய தேசாதிபதி காப்பாளர் என்னும் போஷகராயிருந்தார். உத்தியோக ரீதியில் கல்விப் பணிப்பாளர் தலைவராயும், வடபிரதேசப் பிரதம கல்வி அதிகாரி செயலாளராகவும் இருந்தனர். உபதலைவர்களாகவும், நிர்வாகசபை உறுப்பினர்களாகவும் மூத்த தமிழ் அறிஞர்கள் பலரும் இருந்து செயற்பட்டனர்.

### குறிக்கோள்

சாதி, சமய வேறுபாடின்றி மொழித் தொண்டு புரிதலை இச்சங்கம் தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தது. தமிழிலும், சமஸ்கிருதத்திலும், பிரவேசபண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் முதலான மூன்று பரீட்சைகளையும் நடத்துதல், தமிழாய்வு மகாநாடுகள் நிகழ்த்துதல், பழந்தமிழ் இலக்கிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், நூல்கள் வெளியிடுதல், காவிய பாடசாலை நடத்தித் தமிழிலும், சமஸ்கிருதத்திலும் பட்டங்களுக்குக் கற்பித்தல் முதலானவற்றை தனது குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வந்தது.

### பெறுபேறு

ஏறத்தாழ 1950ஆம் ஆண்டளவில் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தில் கற்று 564 பிரவேசபண்டிதர்களும், 406 பாலபண்டிதர்களும், 71 பண்டிதர்களும் தேர்ச்சி பெற்றிருந்தனர்.

### பரமேஸ்வர பண்டித ஆசிரிய கலாசாலை

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்திய வகுப்புகளில் கற்று வந்தவர்கள் பண்டிதர்களாக உருவாகிய வேளையில் அவர்களுக்கு ஆசிரியப் பயிற்சி அளிப்பதற்கு சு.நடேசபிள்ளை தமது முகாமையில் பரமேஸ்வர பண்டித ஆசிரிய கலாசாலையை ஆரம்பித்தார். இது பரமேஸ்வராக் கல்லூரிக்கும், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்துக்கும் பரமேஸ்வராக் கல்லூரியின் இன்னொரு பரிணாமமாக முகிழ்த்து உயர்கல்விச் சேவையில் 50வது ஆண்டை நிறைவு செய்திருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குமிடையேயான பூர்வஜென்ம உறவைக் காட்டிநிற்கின்றது.

### 'கலாநிதி' சஞ்சிகை வெளியீடு

கலாநிதி என்ற பெயரிலான சஞ்சிகையை 1942ஆம் ஆண்டிலிருந்து ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் வெளியிட்டு வந்தது. அதில் இலக்கியம், இலக்கணம், கலைகள், வரலாறு, கல்வி, கவிதைகள் முதலிய விடயங்கள் ஆராயப்பெற்றன.

### பால பண்டிதர் கற்கைநெறியின் புலமைத்துவ மேம்பாடு

- தமிழில் உள்ள இலக்கண மூல நூல்களை நேரடியாகவே கற்று தமிழ் இலக்கண வரலாற்றில் தெளிவான அறிவினைப் பெறும் வாய்ப்பு.
- தமிழ் இலக்கியங்களின் தொன்மையான வடிவங்களைத் தெளிவாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு.
- தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழர் வரலாறு, தமிழர் பண்பாடு மற்றும் விழுமியங்கள் பற்றி ஆழமான அறிவினைப் பெறும் வாய்ப்பு.
- வளர்ந்துவரும் தொழில்நுட்பமயமாதல் மற்றும் பூகோளமயமாதல் சூழலில் தமிழ்மொழியை அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்ப்பதற்கான ஆற்றல் உள்ளவர்களை உருவாக்குதல்.

### படைப்பாற்றலும் திறனாய்வுக்கான தகவமைப்பும்

- ஆக்க இலக்கியத்துறையில் ஆற்றலையும் ஆளுமைப் பண்பினையும் பெறுதல். இவ்வகையில் நாவல், சிறுகதை, கவிதை போன்ற படைப்பிலக்கியங்களில் சுயமாக ஈடுபடும் தகுதி நிலையினைக் கொண்டிருப்பார்கள்.
- படைப்பிலக்கியங்களைத் திறனாய்ந்து ஆக்கபூர்வமான விமர்சனங்களை முன்வைக்கும் திறனாய்வாளர்கள் உருவாகுதல்.
- பேச்சாற்றல் மற்றும் தலைமைத்துவப் பண்புடைய ஆளுமையாளர்களை உருவாக்குதல்.
- விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களில் மாற்றத்துக்கான முகவர்களாக செயற்படுவதற்கான திறன்களை கொண்ட ஆளுமையாளர்களை உருவாக்குதல்.

### தொழிலுக்கான தகுதியும் தொழில்வாய்ப்பும்

- தமிழ்மொழியில் புலமைமிக்கவர்கள் ஊடகத்துறையிலும், கற்பித்தல் துறையிலும் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உருவாகும்.
- பத்திரிகைகள், சஞ்சிகைகள், பதிப்பகங்கள் மற்றும் அச்சகங்கள் போன்ற துறைகளில் கட்டுரையாளர்களாகவும், விமர்சகர்களாகவும், மொழிச் செம்மையாக்குபவர்களாகவும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.
- தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கிலமொழி ஆகிய பாடங்களுக்கும் இக்கற்கையில் முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையில் பல்வேறு நாடுகளிலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் அடுத்த தலைமுறைக்கு தமிழ்மொழியைக் கற்பிப்பதற்கான திறன்களைக் கொண்டிருப்பார்கள்.
- தமிழர்களது பண்பாடு மற்றும் வரலாறு தொடர்பான புலமையாற்றல்களைக் கொண்டிருப்பதனால், மாணவர்கள் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் தமிழியல் தொடர்பான ஆய்வுச்செயற்றிட்டங்களில் தொழில்வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற வசதிவாய்ப்புகள்

- சிங்கப்பூர் எஸ்டேட் கந்தையா கார்த்திகேசன் அறக்கொடை நிதியத்தின் முழுமையான நிதிப் பங்களிப்பில் இருந்து மிகவும் குறைந்த கட்டணத்துடன் பாலபண்டிதர் கற்கையை மேற்கொள்ளுதல்.
- தமிழியல் நூலகத்தின் நூல்களை வார இறுதி நாள்களிலும் பயன்படுத்துதல்.
- ஒப்படைகளைத் தயாரிப்பதற்காக தமிழியல் நூலக கணினிக் கூடத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பு.

### முடிவும் தொடர்ச்சியும்

இலங்கைப் பிரதமர் டட்லி சேனாநாயக்க ஆரம்பத்தில் பரமேஸ்வரா வளாகத்தில் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பணிமனைக்கு அத்திபாரம் நாட்டினார். அந்த அத்திபாரத்திலேயே இன்று பல்கலைக்கழக ஆனந்த குமாரசுவாமி மண்டபம் எழுந்துள்ளதாக கா.சி.குலரத்தினம் தனது நூலாகிய இந்துபோர்ட் இராசரத்தினம் : காலமும் வாழ்வும் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பொன்விழா கொண்டாடும் இவ் ஆண்டில் இச்சங்கத்திற்கு புத்துயிர் அளித்து பொலிவு காண விளைந்திருப்பது முக்கியமான ஒரு வரலாற்று நிகழ்வாகும். மரபுத் தமிழை பல்கலைக்கழக மட்டத்தில் வளர்க்கவும் உயர்த்தவும் முன்னின்று ஊக்கமளிக்கும் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா அவர்களின் பணியும் தூரநோக்கும் போற்றுதலுக்குரியது.

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மற்றவர்களை நம்பி எந்த பொறுப்புகளையும் ஒப்படைக்க வேண்டாம். கனிவாகப் பழகுங்கள். உத்தியோகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். பொறுமைத் தேவைப்படும் நாள். கூடுதலாக லாபம் கிடைக்கும். சிரமங்கள் அறவே நீங்கும்.

**இடபம்:** உங்களுடைய பலம் பலவீனத்தை உணர்வீர்கள். கல்யாணப்பேச்சு வார்த்தை வெற்றியடையும். நண்பர்கள் தேடி வருவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. சில பொறுப்புகளை ஒப்படைப்பார். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மிதுனம்:** வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உங்களை சுற்றி இருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துகொள்வீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள்.

**கடகம்:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.

**சிம்மம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள். இழப்புகளை சரி செய்வீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் புதுத் தொடர்பு கிடைக்கும். உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**துலாம்:** எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். மற்றவர்களிடம் வீண் கோபத்தைத் தவிர்க்கவும். கடினமாக உழைத்து லாபம் ஈட்டுவீர்கள்.

**விருச்சிகம் :** குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். அலைச்சல் உண்டு. திடீர்ப் பயணங்கள் இருக்கும். தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**தனுசு:** குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டுக்குள் வரும். முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**மகரம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கும்பம்:** பணப்புழக்கம் கணிசமாக உயரும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் புதுப் பொறுப்புகள் தேடிவரும்.

**மீனம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை கற்று கொள்வீர்கள்.

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன. 27

அரியாலை, வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய சங்காபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி 9.30 மணிக்கு திரவிய அபிஷேகம் இடம்பெறும். தொடர்ந்து 1008 சங்காபிஷேகம் இடம்பெற்று அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். மாலை 5.30 மணிக்கு அம்பாள் உள்வீதி, வெளிவீதி உலாவருவார் என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சட்டத்தின் பெயரால் சர்வாதிகாரம்

நிகழ்நிலைக் காப்புச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. சபாநாயகர் கையெழுத்திட்டதிலிருந்து சட்டம் நடைமுறைக்கு வரும். இந்தச் சட்டத்தின் நோக்கம் அதன் சரத்துகள் தொடர்பில் பல்வேறு குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. அவை எல்லாவற்றுக்கும் அப்பால் சட்டம் நிறைவேற்றப்பட்ட முறைமை தொடர்பிலும் பல்வேறு அபிப்பிராயங்கள் உள்ளன. நாடாளுமன்ற சம்பிரதாயத்துக்கும் - நடைமுறைக்கும் புறம்பாக இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியிருக்கின்றன. இந்தச் சட்டவரைவு தொடர்பில் உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி கடும் எதிர்ப்பும் வெளியிடப்பட்டு வருகின்றது. இலங்கை இப்போதிருக்கும் சூழலில் இப்படியொரு சட்டவரைவு தேவையா என்ற கருத்து பரவலாக முன்வைக்கப்படுகின்றது.

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான துர்நடத்தைகளைக் கட்டுப்படுத்துவதற்காகவே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததாக ஆளும் கட்சியினர் குறிப்பிடுகின்றனர். ‘குட்டைப்பாவாடைகளுடன் பெண்கள் நடமாட முடியாத சூழல் இருக்கின்றது. அப்படி அவர்கள் நடமாடுவதை படமெடுத்து சமூகவலைத்தளங்களில் பகிர்கின்றனர். பெண்கள் குளிப்பதைக்கூட படமெடுத்து சமூகவலைத்தளங்களில் தரவேற்றுகின்றனர். இவற்றைக் கட்டுப்படுத்த இந்தச் சட்டம் அவசியம்’ என்று நாடாளுமன்றத்தில் இந்தச்சட்டவரைவு மீதான விவாதத்தின் போது ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே கூட உரையாற்றியிருந்தார். அவர் குறிப்பிடுவதைப்போன்று இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவோரைத் தண்டிக்க எமது நாட்டில் போதுமான சட்டங்கள் அரசமைப்பில் ஏற்கனவே உள்ளன. அவற்றை தற்போதைய நவீன யுகத்துக்கு ஏற்றவாறு சர்வதேச தரத்துக்கு மாற்றியமைத்தாலே போதுமானது. இவ்வாறான சிறப்பான சட்டம் ஒன்று அதற்குத் தேவையில்லை.

நடைமுறையில் பயங்கரவாதச் செயற்பாடுகளைக் களைவதற்குப் போதுமான சட்டங்கள் அரசமைப்பில் இருக்கத்தக்கதாகவே, இந்த நாட்டில் பயங்கரவாதத் தடைச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்தச்சிறப்புச் சட்டத்தின் விளைவை 3 தசாப்தங்களாக இந்த நாட்டின் மூவின மக்களும் அனுபவித்திருக்கின்றனர். சட்டத்தை நடைமுறைப்படுத்துவோருக்கு வழங்கிய கட்டுப்பாடற்ற அதிகாரம், அந்தச் சட்டத்தை வைத்து அவர்கள் ஆள்வோரின் நலனுக்காக எவ்வாறெல்லாம் செயற்பட்டார்கள் என்பதை அறிய முடியும். இப்போது உருவாக்கப்பட்டுள்ள நிகழ்நிலைக் காப்புச் சட்டமும் அவ்வாறானதொன்றே. ஆட்சியாளர்களின் தேவைக்கே அது பயன்படுத்தப்படப் போகின்றது. ஆட்சியாளர்களுக்கு விரும்பத்தகாத சகல பதிவுகளும் சமூகவலைத்தளங்களிலிருந்து நீக்கப்படப் போகின்றன. அவ்வாறான பதிவர்கள் குறிப்பாக மனித உரிமை ஆர்வலர்கள் - முற்போக்குவாதிகள் - ஊடகர்கள் கைதாகப் போகின்றனர். இந்தச் சட்டத்தின் ஊடாக ஜனாதிபதியால் 5 பேர் கொண்ட ஆணைக்குழு நியமிக்கப்படும். அந்த ஆணைக்குழுவே, ஒவ்வொரு சமூகவலைத்தளப் பதிவுகள் தொடர்பிலும் தீர்மானிக்கும் உரித்தைக்கொண்டிருக்கப்போகின்றது. ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஓர் ஆணைக்குழு எப்படி இயங்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். ஏற்கனவே இந்த நாட்டில் சுயாதீன ஆணைக்குழுக்கள் என்ற பெயரில் இயங்கிய ஆணைக்குழுக்கள் ஆட்சியாளர்களின் தாளத்துக்கு ஆடாவிட்டால் அவற்றுக்கு என்ன நடந்தது என்பது பரகசியமானது. இப்படியான நிலையில் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆணையாளர்கள் சமூகஊடகங்களின் பதிவுகளை எந்தக் கண்ணோட்டத்தில் பார்ப்பார்கள் என்பதெல்லாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆணைக்குழு, சமூக வலைத்தளப் பதிவுகள் தொடர்பில் எடுக்கும் தீர்மானங்களை சவாலுக்கு உட்படுத்தமுடியாது. அதாவது மேன்முறையீடு செய்யமுடியாது. நீதிமன்றப் பொறிமுறையை நாடமுடியாது. இது மிகமோசமானதொரு நடைமுறையே. இப்படியான சட்டத்தையே நாடாளுமன்றத்தில் தலைகீழாக நின்று ஆளும் தரப்பு நிறைவேற்றியிருக்கின்றது. மக்கள் இதன் ஆபத்தை உணர்ந்து வீதிக்கு இறங்காத வரையில் ஆட்சியாளர்கள் இதை விட மோசமாக இன்னும் செயற்பட்டுக் கொண்டுதான் இருப்பார்கள்.



### உரிமைக்காக உயிர்கொடுத்த நாம்

## நிகழ்நிலை காப்புச் சட்டத்துக்கு எதிராகவும் போராட வேண்டும்

**யாழ்ப்பாணம், ஜன. 27**

**உரிமைகளுக்கு உயிரைக் கொடுத்துப் போராடிய நாம், நிகழ்நிலைக் காப்புச் சட்டத்துக்கு எதிராகத் திரட்சியாக இணைந்து போராடவேண்டும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சுரேஷ்பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
சமூக வலைத்தளங்களுக்கு மேல் குற்றவியல் சட்டம் போல நிகழ்நிலைக் காப்புச் சட்டம் திணிக்கப்பட்டுள்ளது. இன்று அச்சு ஊடகங்களை விட சமூக ஊடகங்கள் ஊடாக நிமிடத்துக்கு நிமிடம் செய்தி பரிமாறப்படுகின்றது. இதைக் கட்டுப்படுத்தவே இந்தச் சட்டம். நடப்பு ஆண்டுகளில் பல தேர்தல்கள் நடக்கவிருக்கின்றன. ஆளும் தரப்புக்கு எதிரான மக்களின் மனநிலை சமூக ஊடகங்கள் ஊடாக வெளிப்படுத்தப்பட்டு, மக்கள் ஆளும் கட்சிக்கு எதிராகத் திரள்வார்கள் என்பதால் அதைக் கட்டுப்படுத்த இந்தச் சட்டம் பயன்படப்போகின்றது. இதை எதிர்த்துப் போராடவேண்டும் - என்றார். (ஒ-125)

## ஆண்கள் மீது துஷ்பிரயோகம்; குற்றமாக்க அங்கீகாரம்

கொழும்பு, ஜன. 27
ஆண் சிறுவர்களைத் துஷ்பிரயோகம் செய்வதை குற்றமாக்குவதற்குத் தண்டனைச் சட்டத்தில் திருத்தங்கள் செய்ய முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.



நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)

### சட்டத்தரணிகள் கைகலப்பு

கொழும்பு, ஜன. 27
சிரேஷ்ட பெண் வழக்கறிஞர்கள் உள்ளிட்ட ஐவரால் இளம் வழக்கறிஞர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கம்பஹா அத்தனகல்ல நீதிவான் நீதிமன்றத்தில் கடமையாற்றும் வழக்கறிஞர்களே இவ்வாறு மோதலில் ஈடுபட்டுள்ளனர். (ச-இ)

## பெலியத்த துப்பாக்கிச்சூடு; இருவர் கைது

பெலியத்தவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஐவர் உயிரிழந்த சம்பவத்துக்கு உடந்தையாக இருந்ததாகச் சந்தேகிக்கப்படும் மேலும் இருவர் காலியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர்களிடமிருந்து ஹெரோய்னும் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச-இ)

## ஆட்சியாளர்களின் பாதுகாப்புக்கே சட்டம்

நிகழ்நிலைக் காப்புச் சட்டம் இந்த அரசால் நிறைவேற்றப்பட்டது குறித்து ஆச்சரியப்படவேண்டியதல்ல. ஆளும் தரப்பை எவரும் கேள்வி கேட்கக் கூடாது. அதற்காகவே இந்தச் சட்டம் என்று வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
இந்த நாட்டில் இப்படியொரு சட்டம் வராவிட்டால்தான் நாம் ஆச்சரியப்படவேண்டும். பொருளாதார நெருக்கடி, அரசியல் உறுதிப்பாடின்மை காரணமாக பொருளாதார, கல்வியியல் நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறிய பின்னரும் ஏன் இன்னும் சிலர் இருந்து அரசின் குறைகளைத் தட்டிக் கேட்கின்றனர். அவர்களின் வாயையும் மூடவேண்டும். அதற்காகத்தான் இந்தச் சட்டம். தமிழ் மக்களின் உரிமைகளை மாத்திரம் மிதித்த ஆட்சியாளர்கள் இப்போது ஒட்டுமொத்த மக்களின் உரிமையிலும் கைவைத்துள்ளார்கள். இதற்கெதிராக நாம் நிச்சயம் போராடவேண்டும்–என்றார். (ஒ-125)

### நாளை

**28.01.2024**
**ஞாயிற்றுக்கிழமை**
**தை – 14**
சுபநேரம் : 09.36 – 11.06
ராகுகாலம் : 05.06 –06.36

### நாளொரு நல்வார்த்தை

**வெறும் வாய்ச்சொல்லானது கற்பனையில் வேலை செய்வதைப் போன்றது.**

**- வில்லியம் பட்லர் ஈட்ஸ்–**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தை இயங்குவதில்லை

கிளிநொச்சி , ஜன.27

கிளிநொச்சி, பூநகரி முக்கொம்பன் கிராமத்தில் சந்தை ஒழுங்காக இயங்குவதில்லை என கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தச் சந்தை உருவாக்கப்பட்டது.

சந்தை தொடங்கப்பட்டபோது அயலிலுள்ள கடைகளில் மரக்கறிகள் விற்கக்கூடாது என்ற உத்தரவுகள் பிரதேசசபையால் வர்த்தகர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பிரதேசசபையின் கண்காணிப்புகள் குறைய சந்தைக்கு வெளியே மரக்கறிகள், இறைச்சி, மீன் போன்ற உணவுகள் விற்கப்படுவதால் சந்தைக்கு மக்கள் வருவதில்லை.

பூநகரி, பிரதேசசபை கண்காணிப்புகளை மேற்கொண்டு சந்தையைத் திறம்பட இயங்க வைப்பதற்கு நடவடிக்கையை முன்னெடுக்கவேண்டும் என இந்தப்பகுதி பொதுஅமைப்புகள் தெரிவித்துள்ளன. (ப-13)



## வாக்களிப்பது உரிமையும் ஒவ்வொருவரின் கடமையும்

### உதவித் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 27

**தேர்தல்களில் வாக்களிப்பது ஒவ்வொருவரினதும் உரிமை மாத்திரமல்ல அது கடமையும் கூட. இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன என்று வாக்காளர்கள் இருக்கக்கூடாது.**

-இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் யாழ். மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கி.அமல்ராஜ்.

யாழ். மாவட்ட தேர்தல் செயலகத்தில் யாழ்ப்பாண கல்வி வலய மாணவர் நாடாளுமன்றச் செயலமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும், மாணவர் நாடாளுமன்றத் தேர்தலுக்கும், தேசிய ரீதியான தேர்தலுக்குமான ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளையும் எடுத்துக் கூறியதுடன் தேர்தல் சட்டங்கள் தொடர்பிலும் விளக்கமளித்தார். (ஒ-இ)



நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் தைப்பூச திருநாளை முன்னிட்டு சிறப்புப்பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து புதிதாக அமைக்கப்பட்ட 32 அடி உயரம் கொண்ட அழகிய திருமஞ்சத்தில் அடியவர்கள் சூழ சுவாமி வீதிவலம் வந்தார் . (ச-17)

## வீதிகளுக்கு மோட்சமின்றி அம்பலப்பெருமாள் கிராமம்

முல்லைத்தீவு, ஜன. 27

முல்லைத்தீவு, அம்பலப்பெருமாள்குளம் கிராமத்திலுள்ள வீதிகள் பல முழுமையடையாது அரைகுறையாகக் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றமையால் போக்குவரத்தில் சிரமங்களை எதிர்நோக்க நேரிடுகிறது என்று கிராமமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்:

மஹிந்த ஆட்சிக்காலத்தில் அம்பலப்பெருமாள்குளத்திலிருந்து அக்கராயன் நோக்கிய 3 கிலோமீற்றர் வீதி புனரமைக்கப்படும் எனப் பெயர்ப்பலகைகள் நடப்பட்டன.

பெயர்ப்பலகை நடப்பட்டு ஐந்தாண்டுகள் கழிந்த நிலையிலும் தற்போதுவரை கிரவல் மண் குவிக்கப்பட்ட குண்டும் குழியும் நிறைந்த வீதியாகவே காணப்படுகிறது.

எனவே அம்பலப்பெருமாள் குடியேற்றத்திட்டத்தில் 110க்கு மேலான குடும்பங்கள் வாழ்கின்ற நிலையில் இங்குள்ள முதன்மை வீதிகளைத் தற்காலிகமாகவேனும் செப்பனிட உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச-13)



## கௌரவிப்பும் பொதுக்கூட்டமும்

யாழ்ப்பாணம், ஜன. 27

சுழிபுரம், தொல்புரம் மணிவாசகர் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் புலமைப்பரிசில், சாதாரணதரப் பரீட்சை மற்றும் சதுரங்கப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் வருடாந்த பொதுக்கூட்டமும் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு கே.ஏ.எஸ்.சத்தியமனை நூலக அரங்கத்தில் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான சி.கனகசிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். (ச)

## கல்வி வளர்ச்சிக்கு மன்னாரில் குழு

யாழ்ப்பாணம், ஜன. 27

மன்னார் மாவட்ட உயர்தர வகுப்பு மாணவர்களின் கல்வி மற்றும் கல்விக்கான உதவிகளை முன்னெடுத்துச் செல்வதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்துக்கான வேலைவாய்ப்புகளை வெளி மாவட்டத்தவர்கள் தட்டிச்செல்லும் நிலையில் மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் மாவட்டத்திலுள்ள ஒரு சில கல்விமான்களை அழைத்து இதற்கென குழுவொன்றை அமைப்பதற்கான தேவை குறித்து அறிவுறுத்தினார்.

அதற்கமைய 15 பேர் கொண்ட நிர்வாகம் அமைக்கப்பட்டது. (ச-60)

## டக்ளஸைச் சந்திக்க போராட்டக்காரர் முடிவு

கிளிநொச்சி, ஜன. 27

கடற்றொழில் அமைச்சரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக பொன்னாவெளி அனைத்து மக்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது. பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராகப் போராட்டம் இடம்பெற்று வருகின்றது.

நேற்றைய தினம் ஒன்றுகூடிய அனைத்து மக்கள் ஒன்றியக் குழுவினர் பொன்னாவெளி கிராமத்துக்கு வருகைதரும் கடற்றொழில் அமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவித்தனர். (ஒ-13)

## பாடசாலைக் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு

பல வருடங்களுக்குப் பின்னர் வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் பின் தங்கிய பாடசாலையான கோயில்புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயத்தின் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

வவுனியா ஊடகவியலாளர்கள் புலம்பெயர் தேசத்தில் வசிக்கும் கோவில்குளம் மஹா விஸ்ணு ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ ஜெ.மயூரக்குருக்களிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக அவரால் வழங்கப்பட்ட நிதித் திட்டத்தின் மூலம் குழாய்க் கிணறு நிர்மாணிக்கப்பட்டு, குடிநீர்த் தாங்கியும் நிறுவி பாடசாலையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ஒ-13)

## துப்புரவு செய்க

கிளிநொச்சி, ஜன.27

கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதேச செயலகங்கள் ஊடாக பல தடவைகள் காணிகளைத் துப்புரவு செய்யுமாறு அறிவித்தல்கள் வழங்கப்பட்ட போதிலும் பல காணிகள் துப்புரவு செய்யப்படாமலே காணப்படுகின்றன.

காணிகளைத் துப்புரவு செய்யாத குடும்பங்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென கிராமங்களின் பொது அமைப்புகள் தொடர்ச்சியாக வலியுறுத்துகின்றன. (ப-13)

## ஆரம்பப் பாடசாலையை இயக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, ஜன.27

கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள மணியங்குளம் கிராமத்தில் ஆரம்பப் பாடசாலையை இயங்க வைப்பதற்கான நடவடிக்கையை கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிமனை முன்னெடுக்க வேண்டுமென பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். மணியங்குளக் கிராமத்தில் பாடசாலை அமைப்பதற்கான காணியுள்ளதால், அதில் பாடசாலையை அமைத்தால் மாணவர்கள் கிராமத்திலேயே கல்வி கற்கமுடியும் என்றும் பெற்றோர் தெரிவித்தனர். (ப-13)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## A/L Chemistry 2024 & 2025

2024, 2025 Batch Tamil/ English ஆசிரியரால்
(B.Sc, MSC Chemistry) குழுவாகக் கற்பிக்கப்படும்.

**076 410 5838**

## புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

முன்பள்ளி தொடக்கம் தரம் - 3 வரையான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
தனிப்பட்ட முறையில் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும்.

**074 179 3394**

## பனை சார் உற்பத்திகளின் கொள்வனவு

பனை அபிவிருத்திச் சபையானது பனை சார் உற்பத்தியாளர்கள் மற்றும் முயற்சியாளர்களின் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பினை அதிகரிக்கும் நோக்குடன் பனை சார் உற்பத்திகளினை கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்துள்ளது. இதன் அடிப்படையில் பின்வரும் பனை சார் உற்பத்திகளை மேற்கொள்ளும் உற்பத்தியாளர்கள் தங்களின் உற்பத்தி சம்பந்தமான விபரங்கள் பிரதானமாக, அலகு ஒன்றின் விலையினை குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்

- பனங்கட்டி
- பனம் பாணி
- புழுக்கொடியல்
- சீவல் ஒடியல்
- ஒடியல்
- வட்டசீவல்
- பனாட்டு
- கல்லாக்காரம்

மற்றும் ஏனைய பனை சார் உற்பத்திகள்


**முகவரி :**

கொள்வனவுக்குழு,
பனை அபிவிருத்திச் சபை,
கண்டிவீதி, கைதடி,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு
077 772 1334
077 252 2716
077 662 4408

(cr.41628) (N-I)

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
21.08.1944

ஆண்டவன் அடியில்
11.02.2020

## அமரர் வேலாயுதர் காசிநாதர்

(ஓய்வுபெற்ற வயோதிபர் இல்ல பணியாளர் - கைதடி)

திதி: துதியை (அபரபக்கம்)

**பாசமிகு கணவரே, தந்தையே!**

பார்புகழ் போற்ற பக்குவமாய்
எமை வளர்த்த பண்பாளனேநேசத்தின் இருப்பிடமே
எம் நெஞ்சம் எல்லாம் நிறைந்திருப்பவரே !

எங்கள் உயிர் மூச்சாய்
எம்மோடு வாழ்ந்திருந்த அப்பப்பாவே !
எமையெல்லாம் விட்டு இறைவன் அருகில் சென்றீரோ!

வரமாக எமக்கு கிடைத்த ஐயாவே !
வளமாக எமைக்காத்த ராஜாவே !
உமை வருத்தி எமைச் சுமந்தீர்
உண்மை அன்பை எமக்களித்தீர்
உங்கள் நினைவுகள் எப்போதும்

அன்பால் என்றும் எத்தனை ஆண்டுகள்
ஆனாலும் நீங்காது உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை விட்டு

"எங்கள் உள்ளங்களில் அணையா நெருப்பாய்
உங்கள் புன்னகை துளிர்விட்டுத் தளிர்களாய்
எங்கள் இதயங்களில் நனைத்துக் கொண்டே இருக்கும்"

**ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தாலும் என்றும் உங்கள் நினைவுகளுடன்**

ஈஸ்வரி பவனம்,
கைதடி கிழக்கு, கைதடி.

குடும்பத்தினர்

## புதுக்குடியிருப்பு
## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ - து)
## கிளை பொதுச்சபை கூட்ட அறிவித்தல்
## 03.02.2024

மேற்படி சங்கத்தின் துணைவிதிப் பிரிவு 28ற்கு அமைய சங்கத்தின் பின்வரும் கிளைகளினதும் கிளைக்குழு தெரிவுக்கான கிளைப் பொதுச்சபை கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையிற்கமைய நடைபெறவுள்ளது.

திகதி - 03.02.2024 சனிக்கிழமை
நேரம் - முற்பகல் 10.00 மணி

| கிளை இல | கிளைகளின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|
| 01 | புதுக்குடியிருப்பு மேற்கு | விக்கினேஸ்வரா வித்தியாலயம் | திரு. வ. நிருபாகரன் |
| 02 | புதுக்குடியிருப்பு கிழக்கு | சிவனகர் அ.த.க.பாடசாலை | திரு.ம.கபிலன் |
| 03 | புனித சூசையப்பர் | புதுக்குடியிருப்பு றோ.த.க.வித்தியாலயம் | திரு.க.பரநிருபன் |
| 04 | ஆனந்தபுரம் | ஆனந்தபுரம் அ.த.க.பாடசாலை | திரு.பா.குருபரன் |
| 05 | இரணைப்பாலை | இரணைப்பாலை மகா வித்தியாலயம் | திரு.ஜெ.சஞ்சீவ் |
| 06 | தேவிபுரம் | தேவிபுரம் அ.த.க.பாடசாலை | திரு.பா.பாலவரதன் |
| 07 | உடையார்கட்டு | உடையார்கட்டு மகா வித்தியாலயம் | திரு.ஸ்ரீ.குகதீப் |
| 08 | சுதந்திரபுரம் | சுதந்திரபுரம் அ.த.க.பாடசாலை | ஜனாப் அ.அஜீப் |
| 09 | வள்ளிபுனம் | வள்ளிபுனம் மகா வித்தியாலயம் | திரு.சி.பாலசுந்தரம் |


கிளை பொதுச்சபை கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்க தகைமையுடைய உறுப்பினர் களுக்கு பொதுச்சபைக்கூட்டங்களிற்கான அழைப்பு கடிதங்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. கிளைக்குழு தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவித்தல்களை சங்கத்தின் சகல கிளைகளிலும் பார்வையிடலாம். கிளைப் பொதுச்சபை கூட்டங்களில் சமூகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்கள் குறித்த அறிவித்தலின் படி கிளைப் பொதுச் சபைக் கூட்டங்களுக்கு சமூகமளிக்குமாறும், வாக்களிக்க தகைமையுள்ள வாக்காளர்களுக்கு அழைப்புக் கடிதம் கிடைக்கப் பெறாவிடின் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு உரிய நேரத்திற்கு கூட்டத்திற்கு சமூகமளிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**புதுக்குடியிருப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்,**
**புதுக்குடியிருப்பு.**

(CR 41641) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
22 . 10 . 1952



மறைவு
23 . 01 . 2024

## அமரர் சுவாமிநாதன் தர்மராணி

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், மடத்தடி மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதன் தர்மராணி அவர்கள் கடந்த (23.01.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், கந்தையா குணவதியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுவாமிநாதனின் அன்பு மனைவியும், சுகந்தினி (கொழும்பு), சுதாஜினி, சுபாஸ்கர் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் சற்குணம், காலஞ்சென்ற நடராஜா மற்றும் பத்மநாதன், காலஞ்சென்றவர்களான காங்கேசன், தணிகாசலம் மற்றும் சுசிலாதேவி, காலஞ்சென்ற மகாதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இரத்தினேஸ்வரி, பாலசுந்தரம், பால கிருஸ்ணன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஸ்ரீதரன் (லக்ஷன் சிற்பக் கலைக்கூடம், கொழும்பு), சிவசங்கர் (நகைத்தொழிலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஸ்ரீஸ்ஹரிகரன், ஸ்ரீஸ்கஜலக்சன், சங்கீத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.01.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தச்சன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி,
மாவிட்டபுரம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 606 2775**

(CS 53704) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவைக் கந்தனுக்கு பாற்குடப் பவனி



யாழ்ப்பாணம், ஜன. 27

இந்துமக்களால் அனுஷ்டிக்கப்படும் விரதங்களில் ஒன்றான தைப்பூச உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் பெரும்பாலான ஆலயங்களில் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்றன. வரலாற்றுச் சிறப்புமிக்க இணுவையூர் கந்தசுவாமி ஆலயத்தில் பாற்குடப்பவனி மருதனார்மட சந்தியிலிருந்து ஆரம்ப மாகி இணுவையூர் கந்தசாமி ஆலயம்வரை சென்றடைந்து நிறைவுற்றது. (ச-27)

## தோட்ட வேலைக்கு ஆள்தேவை

யாழ் அச்சுவேலியில் அமைந்துள்ள விவசாயப் பண்ணைக்கு தோட்ட வேலை (தண்ணீர் இறைப்பு, மருந்து விசிறல்) தெரிந்த ஆண்கள் தங்கி நின்று வேலை செய்வதற்கு தேவை. உணவு, தங்குமிடம் இலவசம். வெளிமாவட்ட நபர்கள் விரும்பத்தக்கது.

**076 739 0413**

## நல்லூர்க் கந்தன் திருமண சேவை

எம்மிடம் சகல விதமான மணமக்களின் ஜாதகங்கள் ஏராளம் கைவசம் உண்டு. ஆண், பெண் V ஆண். பெண் K. N பாட்டி P பாட்டி ஆண் செங்குந்தர் ஜேர்மன் யாழ். வருவார் 1989 செவ்வாய் உண்டு. மணமகள் தேவை.

தொடர்பு : வி.ஜெயந்தி **077 973 3183**

(CS 27789) A-1

# நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 27

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் அமரர் ஆ.சி. நடராஜாவின் 12ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும் மாணவர் கல்வி ஊக்குவிப்பும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு குரும்ப சிட்டி கலைஞானி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சங்கத்தின் தலைவர் பொ.தங்கராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.விஷ்ணுகரன் கலந்துகொள்ள வுள்ளார். (ச)

## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

பிரிவு -51

- ✓ Diploma in English/ Spoken English
- ✓ Diploma in ICT
- ✓ Diploma in AI
- ✓ Diploma in Political Science
- ✓ Diploma in Media Studies
- ✓ Diploma in Business Management
- ✓ Diploma in Caregiver
- ✓ Diploma in Nursing
- ✓ Diploma in Beauty Culture

* காலம்: 03 மாதங்கள் * பெறுமதி மிக்க சான்றிதழ்கள்
* க.பொ.த (உ/த) பரீட்சைகளிற்கு தோற்றிய மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்

ஆரம்பம்: 27, 28/01/2024, 10.00 Am


IPS to your future Thirunelvely, Jaffna.
T.P: 074 234 9120

## காணி விற்பனைக்கு

அல்லிப்பளையில் 13 ஏக்கர் தென்னங்காணி சகல வசதியுடன் கூடிய புதிய தென்னைகளுடன் காணி விற்பனைக்குண்டு. முதலீட்டாளர்களுக்கு சிறந்தது. ஆர்வம் உள்ளவர் மட்டும் தொடர்புகொள்ளவும் (தரகர் வேண்டாம்) நேரடித்தொடர்பு.

**077 667 2713**

## மரண அறிவித்தல்



### நவமணி மார்க்கண்டு

"விஜயமஹால்" வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நவமணி மார்க்கண்டு அவர்கள் கடந்த (24.01.2024) புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையர் மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கோபால் தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தில்லையர் மயிலி தம்பதிகளின் மருமகளும், விஜயபாலன் (ஓய்வுநிலை மின் பொறியியலாளர், இ.மி.ச), விஜயராணி, விஜயகுமார் (ஓய்வுநிலை மின்னியலாளர், யாழ்.பல்கலைக்கழகம்), விஜயசேகர் (கனடா), விஜயமாலினி (தாதிய உத்தியோகத்தர், பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை) ஆகியோரது பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.01.2024) ஞாயிற்றுக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

"விஜயமஹால்"
தர்மதுலசிங்க ச.ச.நிலையம்,
வல்வெட்டி.

(CS 27782) S-1

# யாழ்ப்பாணம் மாநகர சபை
## நடமாடும் கடைகள், தள்ளுவண்டில்கள், குடில்கள் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2024

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 2024 ம் ஆண்டு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட மீள் கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா **1,180.00** (வற் வரியுடன்)
கேள்விப் படிவம் விநியோகித்தல் - **29.01.2024 - 05.02.2024** (மு.ப **9.00** - பி.ப.**3.00** மணி வரை)
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - **06.02.2024** மு.ப 10.00 மணி வரை
கேள்வி திறத்தல் - **06.02.2024** மு.ப 10.00 மணிக்கு

1. விண்ணப்பபடிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க் கப்படல் வேண்டும். அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு **06.02.2024ம் திகதி** மு.ப **10.00 மணிக்கு** முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.
2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.
3. கேள்வி சமர்ப்பிப்பவர் இலங்கைப்பிரஜையாக இருக்க வேண்டும்.
4. கடந்த காலங்களில் தவறுநர் எனக் கணிக்கப்பட்டோர் அல்லது இச்சபைக்கு குத்தகை, வாடகை, வரியாக நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதி அற்றவர் ஆவார். அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும் அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு செலுத்திய வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டையின் பிரதி மற்றும் வதிவிடச்சான்றிதழ் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
6. குத்தகை தொடர்பான நிபந்தனைகளை அலுவலக விளம்பரப்பலகையில் பார்வையிடலாம்.

2024 ம் ஆண்டிற்குரிய நடமாடும் கடைகள், தள்ளுவண்டில்கள், குடில்கள் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்

| இல | விபரம் | கடைகளின் இல | பிணைப் பணம் | ஒரு வருடத்துக்கான ஆரம்ப கேள்வித் தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | நடமாடும் கடைகள் | | | |
| 01 | ஆரிய குளம் | இல 01 | 20,000.00 | 180,000.00 |
| 02 | துரையப்பா விளையாட்டு அரங்கு | இல 01 | 20,000.00 | 180,000.00 |
| 03 | பண்ணை கடற்கரை | இல 01 | 20,000.00 | 180,000.00 |
| 04 | பண்ணை கடற்கரை | இல 02 | 20,000.00 | 180,000.00 |
| 05 | பண்ணை கடற்கரை | இல 03 | 20,000.00 | 180,000.00 |
| 06 | சுப்பிரமணியம் பூங்கா | இல 01 | 20,000.00 | 180,000.00 |
| 07 | பண்ணை மீன்சந்தை | இல 01 | 20,000.00 | 180,000.00 |
| 08 | பண்ணை மீன்சந்தை | இல 02 | 20,000.00 | 180,000.00 |
| 09 | நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையம் | இல 01 | 20,000.00 | 180,000.00 |
| 10 | நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையம் | இல 02 | 20,000.00 | 180,000.00 |
| 11 | நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையம் | இல 03 | 20,000.00 | 180,000.00 |
| | பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் சபையின் எல்லைக்குள் வியாபாரம் செய்வதற்குரிய தள்ளுவண்டில்கள் | | | |
| 12 | தள்ளுவண்டில் | இல 02 | 20,000.00 | 120,000.00 |
| 13 | தள்ளுவண்டில் | இல 03 | 20,000.00 | 120,000.00 |
| 14 | தள்ளுவண்டில் | இல 04 | 20,000.00 | 120,000.00 |
| 15 | தள்ளுவண்டில் | இல 05 | 20,000.00 | 120,000.00 |
| 16 | தள்ளுவண்டில் | இல 06 | 20,000.00 | 120,000.00 |
| 17 | தள்ளுவண்டில் | இல 07 | 20,000.00 | 120,000.00 |
| | நெடுந்தூர பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள குடில்கள் | | | |
| 18 | குடில் | இல 01 | | 50,000.00 |
| 19 | குடில் | இல 02 | | 50,000.00 |
| 20 | குடில் | இல் 03 | | 50,000.00 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் தொலைபேசி இலக்கம் 0212215978 தொடர்புகொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப **9.00 மணி** முதல் - பி.ப 3.00 மணிவரை நேரடியாகச் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆணையாளர்,
யாழ் மாநகரசபை

(CR 41638) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதித்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் காலப்பகுதி தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு எவ்வித அழுத்தமும் பிரயோகிக்கப் படவில்லை. தேர்தலுக்கான அழைப்பையும், நாளையும் தேர்தல் ஆணைக் குழுவே தீர்மானிக்கும்.

இரண்டரை வருடங்களுக்குப் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. அந்தவகையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டாலும் அதனை நடத்துவதற்கும் தயார். நாடாளுமன்றத் தேர்தல் இவ்வாறு முன்கூட்டியே நடத்தப்பட்டாலும் ஜனாதிபதித் தேர்தல் திகதியில் மாற்றம் வராது. சிலவேளை இரு தேர்தல்களும் அடுத்தடுத்து நடத்தப்படக் கூடும்' - என்றார். (அ-ம-44)

## வர்த்தக...

வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், சுகாதாரப் பிரவினர், யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர், நல்லூர் பிரதேசசபை செயலாளர் மற்றும் யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலாளர்களுடன் மாவட்டச் செயலகத்தில் கடந்த 23ஆம் திகதியன்று கலந்துரையாடலொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் எதிர்வரும் 27ஆம் திகதி (இன்று) யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள கடைகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்கமையவே இன்றையதினம் மேற்படி கடைகள், வணிக வளாகங்களில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தச் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்காமல், டெங்குத் தொற்றுக்கு ஏதுவான வகையில் கடைகள் மற்றும் வணிக வளாகங்களை வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்டச் செயலர் சிவபாலசுந் தரன் அறிவுறுத்தியுள்ளார். (அ-ம-26)


# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



## முத்துலிங்கம் பிரேமாவதி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 05 • 01 • 1943 | 27 • 01 • 2020 |

பாசமுள்ள எங்கள் அம்மாவே
பக்குவமாய் எங்களைக் காத்தவரே
பார்க்கும் இடமெல்லாம் உங்கள் ஞாபகங்கள்
வார்த்தைகள் இன்றித் தவிக்கின்றோம்
ஆண்டுகள் நான்கு கடந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
எங்கும் உங்கள் புன்னகை முகம்
உங்கள் பிரிவை ஏற்க மனம் மறுக்குதம்மா!
ஓம் சாந்தி!

உங்கள் நினைவால் வாடும்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 10 . 1944



மறைவு 26 . 01 . 2024

## மாணிக்கம் செல்வரத்தினம்

(திருநெல்வேலி, நியூ செல்வம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் செல்வரத்திம் அவர்கள் நேற்று (26.01.2024) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் கமலாவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மாணிக்கம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற நமசிவாயம் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்ப மருமகனும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், நடராசா, பரமேஸ்வரி, சர்வானந்த தேவி மற்றும் பாக்கியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், விக்கினேஸ்வரன், குமரேசன், பாலரூபினி, கஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பவசாயினி, ரவித்திரா, ஜெனார்த்தனன், கோபினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வர்ஷா, விதுஷா, சாத்விகன், ஜீவிசன், விதுஷன், லக்ஷிகன், ஹாஷ்வின், ஹாய்ஷனன், ஹஸ்றீனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
குமரேசன் 077 786 3198
பாலரூபினி 077 927 3945

(CS 27794) 5-1

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30.05.1960 | மறைவு 07.02.2023

## செல்லத்துரை கேதீஸ்வரன்

திதி : துதியை
(27.01.2024 சனிக்கிழமை)



பண்பிலே சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் அறிவுரை கூறி
நெறிமுறை தவறாமல் நேர்மையாக வாழ்ந்து!
உழைப்பால் உயர்ந்த தங்களின் பிரிவால்
நிம்மதி இன்றி தவிக்கின்றோம்.
"நெஞ்சிருக்கும்வரை நினைவு இருக்கும்"

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

மீனாட்சி அம்மன் கோயிலடி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்கள் நேற்று விடுவிப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 27

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த தமிழக மீனவர்கள் 12 பேரையும் நிபந்தனையுடன் விடுதலை செய்துள்ளது ஊர்காவற்றுறை நீதிமன்றம்.

காரைநகர் கடற்பரப்பில் கடந்த 13ஆம் திகதி அத்துமீறி மீன்பிடித்த இந்திய மீனவர்கள் 12 பேர் இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அவர்கள் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், நீரியல்வளத்துறை அதிகாரிகளால் நேற்று அவர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரணை செய்த ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஜே.கஜநிதிபாலன், மீனவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட மூன்று குற்றச்சாட்டுக்களுக்கும், தலா ஆறு மாதம் என்ற அடிப்படையில் 18 மாதகால சாதாரண சிறைத் தண்டனை விதித்து, அதை ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

மீனவர்கள் பயணித்த மீன்பிடிப் படகுகளுக்கான வழக்கு மார்ச் மாதம் 11ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார். (அ-ம-100)

# நிகழ்நிலைச் சட்டவரைவு: அமெ., ரஷ்யா பனிப்போர்!

கொழும்பு, ஜன. 27

**இலங்கை நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை ஒப்புதல் வழங்கப்பட்ட நிகழ்நிலைக் காப்புச்சட்டவரைவை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்கா, ரஷ்யா இடையில் பனிப்போர் மூண்டுள்ளது.**

நிகழ்நிலைக் காப்புச்சட்டவரைவு சிவில் சமூகத்தினதும், தகவல் தொழில்நுட்பநிறுவனங்களினதும், ஏனைய கட்டமைப்புகளினதும் கருத்துகளைக் கவனத்தில் கொள்ளாமல் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஜனநாயக விழுமியங்களை கேள்விக்குறியாக்குகிறது. இந்தச் சட்டவரைவு மக்களின் கருத்துச் சுதந்திரத்தை அச்சுறுத்துகின்றது என்று அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், ஜூலி சங்கின் கருத்துக்குப் பதிலடியாக ரஷ்யாவின் இலங்கைக்கான தூதுவர் லெவன் சகாரியான் தனது கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார். தனது ருவிற்றர் பதிவில் அவர், அண்மையில் இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலைக் காப்புச்சட்ட வரைவு தொடர்பாக எமது கருத்து, நிகழ்நிலைக் காப்புச்சட்டம் முற்றுமுழுதாக இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் உள்நாட்டு விடயம். இந்த விடயத்தில் வெளிநாடுகள் தலையிடுவது எள்ளளவும் பொருத்தமற்றது என்பதுடன் ஏற்றுக் கொள்ளமுடியாதது என்பதே - என்று குறிப்பிட்டுள்ளார். (அ-ம-6)

# இளையராஜாவின் மகள் உடல்நலக்குறைவால் சாவு

இசைஞானி இளையராஜாவின் மகளும், பின்னணிப் பாடகருமான பவதாரணி உடல்நலக்குறைவால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலமானார். அவருக்கு வயது-47. கடந்த 5 மாதங்களாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த பாடகி பவதாரணி, இலங்கை மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்தார்.

இவர் கடந்த 2000ஆம் ஆண்டில் வெளியான 'பாரதி' படத்தில் 'மயில் போல பொண்ணு ஒண்ணு' பாடலுக்காக பவதாரணிக்கு தேசிய விருது வழங்கப்பட்டது.

அத்துடன் இவர் 'ராசய்யா', 'அலெக்சாண்டர்', 'தேடினேன் வந்தது', 'காதலுக்கு மரியாதை', 'அழகி', 'பிரண்ட்ஸ்', 'தாமிரபரணி', 'உளியின் ஓசை', 'கோவா', 'மங்காத்தா', 'அனேகன்' உள்ளிட்ட பல்வேறு படங்களிலும் பாடியுள்ளார்.

இதேவேளை இசைஞானி இளையராஜா கொழும்பில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியொன்றில் பங்கேற்பதற்காக இலங்கைக்கு வருகை தந்திருந்த நிலையில் மகளின் உயிரிழப்பையடுத்து குறித்த நிகழ்வை ஒத்திவைத்து மகளின் உடலுடன் சென்னை திரும்பினார். (ச-இ)

வடகோவை வரதராஜனின்

# 'ஆளப்போகும் வேர்கள்' நூல் வெளியீடு இன்று

தேசிய கலை இலக்கியப் பேரவையால் 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் ஒரு பகுதியாக, எழுத்தாளரும், ஓய்வுபெற்ற கிராமசேவகருமான வடகோவை வரதராஜன் எழுதிய விவசாய மெய்ப்புனைவுகளின் தொகுப்பான 'ஆளப்போகும் வேர்கள்' நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று பி.ப. 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஓய்வுபெற்ற மாகாண விவசாயப் பணிப்பாளரான சிவபாதம் சிவகுமாரின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், நூல் வெளியீட்டுரையினை ஏறாவூர் கஸல் பதிப்பக நிர்வாகி முகமட் சப்ரியும், விமர்சன உரைகளை இலக்கிய உத்திகள் பற்றி யாழ். பல்கலைக்கழகத்தின் இந்துக் கற்கைகள் பீடத்தின் சிரேஷ்ர விரிவுரையாளர் கலாநிதி தி. செல்வமனோகரனும், விவசாய நுட்பங்கள் தொடர்பாக ஓய்வுபெற்ற உதவி விவசாயப் பணிப்பாளர் சரவணமுத்து சிவநேசனும் ஆற்றவுள்ளனர்.

நூலின் கௌரவப் பிரதிகளை கோப்பாயைச் சேர்ந்த மூத்த முன்னோடி விவசாயியான கைலாயபிள்ளை குமரகுருநாதன், ஏழாலையைச் சேர்ந்த நவீன விவசாயியான பாலசிங்கம் திருமாறன், ஓய்வுபெற்ற விவசாய ஆசிரியரும், சமாதான நீதவானும், கோப்பாய் வடக்கு விவசாய சம்மேளனத் தலைவருமான அருளையா பேரின்பநாயகம் ஆகியோர் பெற்றுக் கொள்ளவுள்ளனர். (ம)

# தூக்கிலிருந்து சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜன. 27

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், யுவதியொருவர் தூக்கிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி யுவதி தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று தமது முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்தனர்.

இறப்புத் தொடர்பான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-27)

# மயங்கி விழுந்து இளைஞர் சாவு!

யாழ்ப்பாணம், ஜன. 27

காய்ச்சலும், வாந்தியும் ஏற்பட்ட நிலையில் திடீரென மயங்கி விழுந்த இளைஞர் ஒருவர் நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு பகுதியைச் சேர்ந்த தனபாலசிங்கம் சிந்துஜன் (வயது - 19) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞர் யாழ்ப்பாணம் - கீரிமலைப் பகுதியில் தங்கியிருந்து வேலைசெய்துவந்தவராவார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். அவரது மரணத்துக்கான காரணம் தெரியவராத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. (ம-27)

# இராணுவ நடவடிக்கை: உடனடியாக நிறுத்துக!

## சர்வதேச நீதிமன்றம் இஸ்ரேலுக்கு உத்தரவு

காஸாவில் இஸ்ரேல் முன்னெடுத்துவரும் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்று சர்வதேச நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

காஸாவில் இஸ்ரேல் தனது இராணுவ நடவடிக்கை மூலம் போர்க்குற்றத்திலும், இன அழிப்பிலும் ஈடுபடுகின்றது என்று தெரிவித்து, சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாபிரிக்கா வழக்குத் தொடர்ந்திருந்தது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் வழக்கில் சாட்சியமளித்த இஸ்ரேல், தென்னாபிரிக்காவின் குற்றச்சாட்டுகளைத் திட்டவட்டமாக மறுத்தது. வெளிப்புறத் தாக்குதல்களுக்கு முகங்கொடுத்து தற்காத்துக் கொள்ளும் உரிமை எங்களுக்கு உள்ளது. இந்தப் போரின் இலக்கு பலஸ்தீன பொதுமக்கள் அல்ல. ஹமாஸ் போராளிகள்தான் என்றும் இஸ்ரேல் தெரிவித்திருந்தது.

இவ்வாறானதொரு நிலையிலேயே, காஸாவில் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகளை இஸ்ரேல் நிறுத்தவேண்டும் என்று சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அத்துடன், இஸ்ரேலுக்கு எதிராகப் பதியப்பட்டுள்ள வழக்கை ஐக்கிய நாடுகள் சபையின் 1948 ஆம் ஆண்டில் கைச்சாத்தான ஒப்பந்தத்தின் கீழ் விசாரிக்கமுடியும் என்பதையும், இஸ்ரேலின் நடவடிக்கை தொடர்ந்தால் அது பலஸ்தீனர்களுக்கு ஏற்படுத்தக் கூடிய மீளமுடியாத பிரச்சினைகள் தொடர்பிலும் தென்னாபிரிக்காவே நிரூபிக்கவேண்டும் என்றும் சர்வதேச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ஆனால், சர்வதேச நீதிமன்றத்துக்கு ஆலோசனைகள் மற்றும் கருத்துகளை வெளியிடவே அதிகாரமுள்ளது. அது தன் உத்தரவை நடைமுறைப்படுத்துமாறு உலக நாடுகளை வற்புறுத்த முடியாது என்று குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## ஊடக...

யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் சுதந்திர ஊடக இயக்கம் உள்ளிட்ட தென்னிலங்கை ஊடக அமைப்புகளின் பங்கேற்புடன் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.பொது நூலகத்திலிருந்து பேரணி ஆரம்பமாகியது. யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தை பேரணி வந்தடைந்ததும் அங்கு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் உள்ளிட்ட தென்னிலங்கை ஊடக அமைப்புகளின் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் ஊடக அடக்குமுறைக்கு எதிரான பல்வேறு கோஷங்களை எழுப்பியதுடன் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் ஒளிப்படங்களையும், பாதாகைகளையும் ஏந்தியிருந்தனர். (அ-ம-66-159-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.எம்.எப்....

கொழும்பு சுங்கத் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் வைத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2023இல் நாம் எடுத்த முடிவுகளால், 2022இல் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவில் இருந்து மீள்வதற்கான வழி ஏற்பட்டது. ஆனால்அது இன்னும்முடியவில்லை. இந்த ஆண்டு இறுதிக்குள், நாட்டின் வருமானத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12 வீதம் ஆக்குவோம். 2026 இல் அதனை 15 வீதமாக அதிகரித்துக் கொள்ளவேண்டும்.

எனவே தற்போதைய பொருளாதாரத்தில் இருந்து வருமானத்தை ஈட்டவேண்டும். வருமானத்தை அதிகரிக்க, பொருளாதாரத்தை மேம்படுத்தவேண்டும். இந்தப் பொருளாதார வளர்ச்சியை எவ்வாறு அடைவது என்ற கேள்வியை இன்று நாம் எதிர்கொண்டுள்ளோம். பழைய பொருளாதார முறையால் நாட்டை முன்னேற்றமுடியாது. ஒவ்வொரு நாளும் கடன் வாங்குவதால் நாட்டின் பொருளாதாரம் சரிந்தது. இந்தப் பொருளாதார முறையை மாற்றவேண்டும்.

போட்டிச் சந்தையுடன், ஏற்றுமதியை அதிகரிக்கவும், அந்நியச் செலாவணியை அதிகரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி தாய்லாந்துடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவுள்ளோம்.

சர்வதேச நாணயநிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரை இங்கு அழைக்கவும் நாம் தயாராக இருக்கிறோம். அவருடன் அனைவரும் கலந்தாலோசிக்கலாம். ஒப்பந்தத்தை மாற்றுவதற்கான வழிகள் இருந்தால் அதனை எவ்வாறு செய்யலாம் எனக் கூறுங்கள். நல்ல திருத்தங்களை நாம் ஏற்றுக்கொள்வோம் - என்றார். (அ-ம-44)

## அரசை...

அதிருப்தி உள்ளது. இதனால் மக்களை ஒடுக்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. போராட்டங்களை முடக்குவதற்குப் பொலிஸார் களமிறக்கப்படுகின்றனர். மறுபுறத்தில் நாடாளுமன்றத்தில் அடக்குமுறைச் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. நிகழ்நிலைக் காப்புச் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அடுத்ததாக புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டுவரப்படவுள்ளது. இந்தச் சட்டவரைவுக்கு சிவில் அமைப்புகள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன. சர்வதேசமும் இந்தச் சட்டவரைவை எதிர்த்துள்ளது.

பயங்கரவாதிகளை ஒடுக்குவதற்காக அல்ல, நாட்டு மக்களையும், ஊடகங்களையும், அரசியல் கட்சிகளையும் ஒடுக்குவதற்காகவுமே இப்படியான சட்டவரைவுகள் கொண்டுவரப்படுகின்றன. அடுத்து புனர்வாழ்வுச் சட்டவரைவும் ஆபத்தானது. அதுகூட அரசியல் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்படும். இவ்வாறு மக்களை அடக்கி ஆளும் இந்த அரசை வீட்டுக்கு அனுப்பவேண்டும். அதற்கான தலைமைத்துவத்தை நாம் வழங்குவோம். எதிர்வரும் 30ஆம் திகதி பெரியதொரு போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளோம் - என்றார். (அ-ம-44)

## மரணத்தைக்...

**தினுடைய மிலேச்சத்தனமான மனநிலையையே இது பிரதிபலிக்கின்றது - இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ** ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

துட்டகைமுனு மன்னனின் கைகளால் எல்லாளன் உயிரிழந்தார் என்பதற்காக துட்டகைமுனு மன்னன் அவரை அவமதிக்கவில்லை. நினைவுத்தூபி அமைத்து அவ்வழியாகச் செல்லும்போது மரியாதை செலுத்துமாறு கோரினார். இரண்டாயிரம் வருடங்கள் கடந்தும் அந்த நடைமுறையை நாம் பின்பற்றுகின்றோம். இப்படியான நாட்டில் தற்போது கீழ்த்தரமான சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

எதிரியாக இருந்தாலும் அவர் மரணித்த பின்னர் அவமதிக்கும் வகையில் செயற்படுவது மனிதப் பண்புகளுக்கு எதிரான செயலாகும். அதனால்தான் பிரபாகரன் உயிரிழந்தபோதும் பட்டாசு கொளுத்துவது, பாற்சோறு சமைப்பது மனித பண்புகளுக்கு எதிரானது எனக் குறிப்பிட்டோம்' - என்றார். (அ-ம-44)

## எதிர்க்கட்சிகளின்...

என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

'நாட்டின் பிரச்சினைகள் தொடர்பிலும், நாணய நிதியத்தின் ஒப்பந்தம் தொடர்பிலும் அனைத்துத் தரப்பினரும் சிந்தித்துச் செயற்படவேண்டும். ஆனால் இன்றும் எமது அரசியல், அப்பளத்தை போலவே உள்ளது. பொரித்தவுடன் அதனை எடுத்து சாப்பிடுகிறோம். மறுதினம் மற்றொன்றை போடுகிறோம் பின்னர் அதனை மறந்து விடுவோம்.

சமூக ஊடகங்கள் தொடர்பிலான சட்டம் கொண்டுவரப்பட்டபோது நாட்டில் கருத்துச் சுதந்திரம் பறிக்கப்படுகிறது எனக் கூச்சலிட்டனர். இருப்பினும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தற்போது அதனை அனைவரும் மறந்துவிட்டனர். அதேபோல் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதன்போதும் மக்களின் உரிமை மீறப்படுகிறது, அனைவரையும் சிறையில் அடைக்கப் போகிறார்கள் எனக் கூச்சலிடுவர். பின்னர் அதை மறந்துவிடுவார்கள்.

அதன் பின்னர் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டவரைவு சமர்ப்பிக்கப்படும்போது கல்வி ஒழிக்கப்படுவதாக கூச்சலிடுவர். பின்னர் மறந்துவிடுவார்கள். அப்பளத்தை போல் மேலே வந்த பின்னர் சத்தம் குறைந்துவிடும். இந்த அரசியலுக்கு என்னால் முடிவுகட்டமுடியாது' என்றும் அவர் தெரிவித்தார். (அ-ம-44)

## தமிழரசின்...

அழைப்பு விடுக்கப்பட்டு திருகோணமலையில் இன்று கூட்டம் இடம்பெறவுள்ளது.

தமிழரசுக் கட்சியின் பொதுக்குழுக்கூட்டம் திருகோணமலையில் இன்று இடம்பெறவுள்ளது. நாளை கட்சியின் பொது மாநாடும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இந்த நிலையில் கடந்த 21 ஆம் திகதி தமிழரசுக் கட்சியின் புதிய தலைவருக்கான தேர்தல் இடம்பெற்றது. 321 பேர் வாக்களித்திருந்தனர். இதில் சி.சிறீதரன் 184 வாக்குகளையும், எம்.ஏ.சுமந்திரன் 137 வாக்குகளையும் பெற்றுக்கொண்டனர். 47 மேலதிக வாக்குகளால் சிறீதரன் வெற்றிபெற்று, தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கட்சியின் பொதுமாநாட்டில் அவர் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்கவுள்ளார். இவ்வாறானதொரு பின்னணியில் இன்றையதினம் பொதுக்கூட்டத்துக்கு முன்பாக மத்திய குழுக்கூட்டத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை பரபரப்பாகியுள்ளது.

மத்தியகுழு உறுப்பினர்களுக்கு மிகக்குறுகிய கால அவகாசத்தில் நேற்று இரவிரவாக அழைப்பு விடுக்கப்பட்டு இந்தக் கூட்டம் கூடப்படுகின்றமை பலவிதமான சந்தேகங்களை எழுப்பியுள்ளன.

(அ-ம-26)

## நவீன...

ஆனால் அரசால் முன்வைக்கப்பட்டுள்ள சட்டவரைவு அடக்குமுறையை இலக்காகக் கொண்டது - என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதாரத்தை முன்னேற்றத்துக்கு டிஜிற்றல் சேவையும் முக்கியமான இடத்தை வகிக்கின்றது. அதற்கான மரணஅடியே நிகழ்நிலைக்காப்புச் சட்டமாகும். இது பொருளாதாரத்திலும் தாக்கம் செலுத்தும். இதன் பிரதிபலன் ஆட்சியாளர்களுக்கு அடுத்த தேர்தலில் கிடைக்கும்.

நாட்டில் தற்போது உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் பழைமையானது. அது தவறான முறையில் மிகவும் கொடூரமான முறையிலேயே பிரயோகிக்கப்படுகின்றது. இன்று தொழில்நுட்பம் முன்னேறியுள்ளது.

அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகளுக்குப் பதிலாக ட்ரோன்களில் தாக்குதல் நடத்தப்படுகின்றது. எனவே, இவற்றை எதிர்கொள்ளக்கூடிய நவீன யுகத்துக்கு ஏற்றவகையிலான புதிய சட்டம் அவசியம். ஆனால் அதற்கு மாறாக, அரசுக்கு எதிரான தொழிற்சங்கவாதிகள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், மக்களை ஒடுக்கும் வகையிலேயே இந்த ஆட்சியின்கீழ் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது' - என்றார். (அ-ம-44)

## பொதுச்செயலாளர்...

வராக சி.சிறீதரன் தெரிவுசெய்யப்பட்ட நிலையில், பொதுச்செயலர் உள்ளிட்ட ஏனைய பதவிகளுக்கு இன்று புதியவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

பொதுச்செயலர் பதவி யாருக்கு வழங்கப்படவுள்ளது என்பது தொடர்பில் கட்சி மட்டத்தில் கடந்த சில நாள்களாகவே கடும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. குகதாசன், சிறிநேசன் மற்றும் சாணக்கியன் ஆகியோர் அந்தப் பதவிக்காகப் பரிந்துரைக்கப்பட வாய்ப்பிருப்பதாக நேற்றுச் செய்திகள் வெளிவந்திருந்தன.

ஆனால், போட்டியில்லாமல் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்படும் பட்சத்திலேயே அந்தப் பதவியை ஏற்றுக்கொள்வேன் என்றும், மாற்று வேட்பாளர் இருக்கும் பட்சத்தில் தேர்தல், வாக்கெடுப்பு உள்ளிட்ட விவகாரங்களுக்குச் செல்லமாட்டேன் என்றும் குகதாசன் நேற்றிரவு உதயனிடம் தெரிவித்தார். இதேவேளை, ஏகமனதாகவோ அல்லது தேர்தல் மூலமோ எவ்வாறு தெரிவுசெய்யப்பட்டாலும் பொதுச்செயலர் பதவியை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று சாணக்கியன் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

தலைமைத்துவப் பதவிக்கான தேர்தலுக்குப் பின்னர் தமிழரசுக்கட்சிக்குள் பிளவு ஏற்பட்ட நிலையில், தமிழரசுக் கட்சின் இன்றைய பொதுக்குழுக்கூட்டம் எதிர்பார்ப்பு மிக்கதாக மாற்றம் பெற்றுள்ளது. (அ-ம-26)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நாடாளுமன்றம்...

அரசமைப்பின் 70 (1) உறுப்புரிமைக்கமைய நாடாளுமன்றக் கூட்டத்தொடரை இடைநிறுத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. அவ்வாறு நாடாளுமன்றம் இடைநிறுத்தப்படும் நாளில் இருந்து இரண்டு மாதங்களுக்கு மேற்படாத வகையில் புதிய நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஆரம்பமாக வேண்டும். அதற்கான திகதியும் குறித் தொகுக்கப்பட வேண்டும். இதற்கமைய புதிய கூட்டத் தொடர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ-ம-44)


போட்டோ கொப்பி கடை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
இடம்-யாழ். கச்சேரி அருகில்.
**076 678 7288**

**நெல் அறுவடையாளர்களுக்கு**

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட **நெல் சூடடிக்கும் இயந்திரம்** எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். மணித்தியாலத்திற்கு 2 தொன் நெற்கதிர் அடிக்கக்கூடியதும் டிராக்டரில் பொருத்தி இயக்கக் கூடியதுமானது.
"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"



**ஆர்க் . என் . கம்பனி**
- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9, வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
- A9, வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020


Hotline: 071 535 7799 / 071 973 9917

**காணி விற்பனைக்கு**

புத்தூர் - மட்டுவில் பிரதான வீதியில் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.
1 பரப்பின் விலை 3லட்சம். விலை பேசிதீர்மானிக்கலாம்.

**074 260 0617**
**077 612 2971**


# மரண அறிவித்தல்



மண்ணில் மலர்வு 17 . 04 . 1948

விண்ணில் மலர்வு 25 . 01 . 2024

## துரைஐயா மகாலிங்கம்

(மினி மகாலிங்கம்)
(Mini Tone, Mini Theatre, Mini Centre, Maha Mini Sounds, Maha Mini Multi Centre, Maha Mini Recording Studio MM Audio - ஸ்தாபகர்)

பூநாறி மரத்தடியைப் பிறப்பிடமாகவும் 958/47, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட துரைஐயா மகாலிங்கம் (மினி மகாலிங்கம்) அவர்கள் கடந்த (25.01.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைஐயா சிவக்கொழுந்து தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான பாக்கியநாதன் பார்வதி தம்பதிகளின் மருமகனும், பரமேஸ்வரி (குயிலா) அவர்களின் அன்புக் கணவரும், சர்மிலா, தேவானந், பவானந், சோபானந் ஆகியோரின் தந்தையும், பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பவளம், விஜயரட்ணம், தையல்நாயகி, சரோஜினிதேவி மற்றும் பாலரஞ்சித், ரஞ்சித்குமார் ஆகியோரின், அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா, சிவசுப்பிரமணியம், லிங்காதேவி, ராஜன், மற்றும் தயானந்தன், சண்றா, லிங்கேஸ்வரி, ராதா மேத்தா, பரந்தாமன், பவானி, பக்தவற்சலன், அருணன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரேமகாந், காயத்திரி, விஜிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரியானந், சூரியானந், வெண்பா, மெலினா, சோமித்ரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.01.2024) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.0 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்டும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**
**077 929 3573**
**077 979 8353**

**958/47, K.K.S. வீதி,**
**நாச்சிமார் கோயிலடி,**
**யாழ்ப்பாணம்.**

(cs 53699) N-1


**கடை வாடகைக்கு**

யாழ்ப்பாணம் இராமநாதன் வீதி முகப்புடன் ஆறு கடைகள் வாடகைக்கு உண்டு.78 அடி நீளம் 12 அடி அகலம் கொண்ட கடைகள் 5 வருட (5) காலப்பகுதிக்கு வாடகைக்கு வழங்கப்படும். அட்வான்ஸ், வாடகை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: **077 468 3354**

**TECHNO WORLD**
**A/L தொழில்நுட்பப் பிரிவு**

**இலவச செயன்முறை வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள்**

**பொறியியல் தொழினுட்பம்**
திகதி - 29,30,31,01- January 2024
நேரம் - காலை 8.30 - 12.00

நவீன ஆய்வுகூட வசதிகளுடன் மற்றும் அனுபவம் மிக்க ஆசிரியர்குழாம்

இடம் - வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: **077 017 5346**

(cr.41623) (N-1)

**கணித பாட வகுப்புக்கள்**

தரம் - 9,10,11 (G.C.E (O.L)
வகுப்புகளுக்கான கணித பாட வகுப்புகள் ஆரம்பம்
இல.886, ஆஸ்பத்திரி வீதி. யாழப்பாணம்.
**077 978 9112**

(cs 53697) (N-1)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி A-9 வீதி முகப்புடன் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**
- நல்ல சூழல் நன்னீரூற்று
- கைதடி சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரம்.
- வடமாகாண சபை 300மீற்றர்
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

**077 129 4999**
**076 788 0591**

**செவிப்புலன் கருவிகள் விற்பனைக்கு**

**செவிப்புலன் குறைபாட்டினால் அவதிப்படுகிறீர்களா?**

கவலை வேண்டாம்!
மிகக்குறைந்த தொகையாக ரூபாய் 9999/= மட்டுமே செலுத்தி செவிப்புலன் கருவி ஒன்றினை உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள்.
உங்கள் வீட்டிற்கே வந்து பரிசோதித்து வழங்குகின்றோம்.



**தொலைபேசி மூலம் முற்பதிவு செய்ய அழையுங்கள்**
**077 434 6245**

விரையுங்கள் குறைந்த கையிருப்புகள் மாத்திரமே!!!

(CS 27783) S-1




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.01. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org